கவனத்திற்கு எடுத்துச் சென்று, மதிப்பீடு தயார் செய்து, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைப்படி குடமுழுக்கு நடத்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. ஆறுமுகம் அவர்கள்.*

திரு. பா. ஆறுமுகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் நிரந்தர முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்களுக்கும் பணிவோடு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. விதி 110—ன்கீழ் அறிக்கைகள்

(அ) உள்நாட்டு மீன்குஞ்சு உற்பத்திப் பண்ணைகளை மேம்படுத்துதல், மீன் இறங்கு தளங்கள் அமைத்தல், ஆற்று முகத்துவாரங்களில் தூர் வாருதல், சேத்துப்பட்டு, பசுமைப் பூங்காவில் முப்பரிமாண காணொளிக் காட்சி அமைத்தல், கடல் மீன் உணவகங்களை ஏற்படுத்துதல், மீனவ இளைஞர்களுக்கு உதவித் தொகையுடன் பயிற்சி வழங்குதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கைகள் அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.*

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, எனது தலைமையிலான அரசு, மீனவர் நலத் திட்டங்கள், உட்கட்டமைப்பு வசதிகளை*

மேம்படுத்துதல் மற்றும் மீன் வள ஆதாரங்களைப் பாதுகாத்தல் போன்ற பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி மீனவர்களின் பொருளாதார மேம்பாட்டிற்கு வழி வகுத்து வருகிறது.

கடந்த ஐந்தாண்டுகளில் 35 மீன் இறங்கு தளங்கள் மற்றும் 7 மீன்பிடி துறைமுகங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன. மேலும், 14 இடங்களில் மீன் இறங்கு தளங்கள் மற்றும் 3 மீன்பிடி துறைமுகங்கள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், உள்ளாட்டு மீன் வளத்தை அதிகரிக்க பல்வேறு உட்கட்டமைப்பு மேம்படுத்தும் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

மீன் வளத் துறை சம்பந்தமாக பின்வரும் புதிய அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் வெளியிடுவதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

1. எங்களது தேர்தல் அறிக்கையில் உள்நாட்டு மீன் உற்பத்திக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படும் என வாக்குறுதி அளித்திருந்தோம். தமிழ்நாட்டில் உள்நாட்டு மீன் உற்பத்தி 2010-2011 ஆம் ஆண்டு 1.71 இலட்சம் டன் என இருந்தது. இது தற்போது 2.4 இலட்சம் டன் என அதிகரித்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதனை 4.5 இலட்சம் டன்களாக உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்குத் தேவையான மீன்குஞ்சு விரலிகள் உற்பத்திக்கு நடவடிக்கை எடுக்கப்படும். நடப்பாண்டில் மீன் வளத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள ஈரோடு மாவட்டம், பவானிசாகர், தஞ்சாவூர் மாவட்டம், அகரப்பேட்டை மற்றும் திருமங்கல கோட்டை, திருவாரூர் மாவட்டம், நல்லிக்கோட்டை, தேனி மாவட்டம், மஞ்சளாறு மற்றும் திருநெல்வேலி மாவட்டம், மணிமுத்தாறு ஆகிய 6 இடங்களில் மீன்குஞ்சு உற்பத்தி மற்றும் வளர்ப்புப் பண்ணைகள் 13.65 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் ஒவ்வொரு வருடமும் கூடுதலாக சுமார் இரண்டு கோடி மீன்குஞ்சு விரலிகள் உற்பத்தி செய்ய இயலும்.

முற்பகல் 10-55

2. கடல் மீனவர்கள் தங்களது மீன்பிடி கலன்களைப் பாதுகாப்பாக நிறுத்துவதற்கும், பிடித்து வரும் மீன்களை சுகாதாரமான முறையில் கரை இறக்கிடவும், மீன் ஏலக் கூடம்,

வலை பழுது பார்க்கும் மையம், குளிரூட்டப்பட்ட கிடங்கு ஆகிய அனைத்து வசதிகளுடன்கூடிய மீன் இறங்கு தளங்கள் திருவள்ளூர் மாவட்டம், பழவேற்காடு, திருவாரூர் மாவட்டம், ஜாம்பவானோடை, தஞ்சாவூர் மாவட்டம், கரையூர்தெரு, தூத்துக்குடி மாவட்டம், கொம்புத்துறை மற்றும் இராமநாதபுரம் மாவட்டம், மோர்பனை ஆகிய 5 இடங்களில் 9.77 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த இடங்களில் மீன் இறங்கு தளங்கள் அமைப்பதன் மூலம் 1,379 நாட்டுப் படகுகளைப் பாதுகாப்பாக நிறுத்துவதற்கு வழிவகை செய்ய இயலும்.

3. 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட ஆழிப்பேரலை மற்றும் 'நீலம்', 'தானே' ஆகிய புயல்களுக்குப் பின்னர், கடலின் நீரோட்டம் மற்றும் அலைகளின் தாக்கம் சரியாகக் கணிக்க இயலாததாக உள்ளது. அதன் விளைவாக, துறைமுகங்கள் மற்றும் ஆற்று முகத்துவாரங்களில் மணல் மேடுகள் உருவாகி, கடல் மீனவர்கள் தங்களது படகுகளை கடலுக்குள் செலுத்த சிரமப்பட்டு வருகிறார்கள்.

எனவே, கடந்த 5 ஆண்டுகளில் ஐந்து ஆற்று முகத்துவாரங்களில் பராமரிப்பு தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. நடப்பாண்டில் கடலூர் மாவட்டம், முதுநகர், நாகப்பட்டினம் மாவட்டம், பழையாறு மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மூன்று மீன்பிடி துறைமுகங்கள் மற்றும் கடலூர் மாவட்டம், வெள்ளாறு, நாகப்பட்டினம் மாவட்டம், பழையாறு, வெட்டாறு ஆகிய மூன்று ஆற்று முகத்துவாரங்களில் பராமரிப்பு தூர்வாரும் பணிகள் 18 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

4. சென்னை மாநகரின் மையப் பகுதியில் அமைந்துள்ள சேத்துப்பட்டு ஏரி 42 கோடி ரூபாய் செலவில் புனரமைக்கப்பட்டு, பொழுதுபோக்கு, தூண்டில் மீன்பிடிப்பு, நடைப் பயிற்சி பாதை, படகு குழாம், குழந்தைகள் விளையாட்டுத் திடல், பன்மாடி வாகன நிறுத்தும் கூடம் ஆகிய வசதிகளுடன்கூடிய பசுமைப் பூங்கா உருவாக்கப்பட்டு, என்னால் 27-2-2016 அன்று துவக்கி வைக்கப்பட்டது. இப்பசுமைப் பூங்கா பொதுமக்களிடம் அமோக வரவேற்பை பெற்றுள்ளதுடன், (மேசையைத் தட்டும் ஒலி) அப்பகுதியின் நிலத்தடி நீர்மட்டத்தினை செறிவூட்டிடும் விதமாகவும் அமைந்துள்ளது.

2016 ஆகஸ்ட் 24] [செல்வி ஜெ ஜெயலலிதா]

பார்வையாளர்களை இப்பூங்காவிற்கு மேலும் ஈர்க்கும் நோக்கில், சூரிய மின்வசதியுடன்கூடிய மீன் காட்சியகம் மற்றும் குளிர்சாதன கவிகைமாடத்தில், Dome-ல் முப்பரிமாண காணொளிகளை காட்சிப்படுத்தும் மெய்நிகர காட்சியகமும் Virtual Reality Centre 6 கோடியே 75 இலட்சம் ரூபாய் செலவில் நடப்பாண்டில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-00

5. தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின்மூலம் மீனவ மகளிர் சுய உதவிக் குழுக்கள் பயன்பெறும் வகையில், பல்வேறு மீன் உணவுப் பொருட்களை தயாரித்திட அவர்களுக்குப் பயிற்சி அளித்து, வேலைவாய்ப்பினை உருவாக்கிடவும், பொதுமக்களுக்கு புரதச் சத்து நிறைந்த ருசியான, தரமான மீன் உணவுப் பொருட்கள் கிடைத்திடும் வகையிலும், சுய உதவிக் குழு மகளிர் பயன்பெறும் வகையில் தங்கும் வசதிகளுடன்கூடிய பயிற்சி மையம் மற்றும் உடனடியான சமையலுக்கும், உடனடியாக உண்பதற்கும் Ready to cook and ready to eat என்பதற்கு உகந்த வகையில், கடல் மீன் உணவு வகைகளைத் தயாரித்திட ஒரு மைய சமையலறைக் கூடம் 8 கோடியே 32 இலட்சம் ரூபாய் செலவில் காசிமேடு பகுதியில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், கடல் மீன் உணவுகளை பொதுமக்களுக்கு சுகாதாரமான முறையில், நியாயமான விலையில், சென்னை மற்றும் மாமல்லபுரம் ஆகிய இடங்களில் விற்பனை செய்திட 1 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவில் (மேசையைத் தட்டும் ஒலி) இரண்டு நவீன நகரும் கடல்மீன் உணவகங்கள் Modern Mobile Restaurants அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

6. மீனவ சமுதாயத்தைச் சார்ந்த பன்னிரெண்டாம் வகுப்பு வரை படித்த இளைஞர்கள், மீன் வளம் சார்ந்த துறைகளில் வேலைவாய்ப்பினைப் பெற்றிட ஏதுவாக பல்வேறு பயிற்சிகளையும், திட்டங்களையும் எனது தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது. எனினும், இந்திய கடலோரக் காவற்படை மற்றும் இந்திய கப்பற்படையில் பணிபுரிவதற்கான உடற்தகுதி மற்றும் கடற்பயண திறமைகளைப் பெற்றிருந்தும், மீனவ சமுதாயத்தைச் சார்ந்த படித்த இளைஞர்கள் முறையான வழிகாட்டுதல்களும், பயிற்சிகளும் இல்லாததால், அந்த வாய்ப்புகளைப் பெற இயலாத சூழ்நிலையில் இருந்து வருகின்றனர்.

எனவே, மீனவ சமுதாயத்தைச் சார்ந்த பன்னிரெண்டாம் வகுப்பு அல்லது அதற்கு மேல் படித்த ஆர்வமுள்ள இளைஞர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு சிறப்புப் பயிற்சிகள் அளிப்பதன்மூலம், அவர்கள் இந்திய கடலோர காவற்படை மற்றும் இந்திய கப்பற்படை ஆகியவற்றால் நடத்தப்படும் தகுதித் தேர்வுகளில் எளிதாகத் தேர்ச்சியடைந்து வேலைவாய்ப்பினைப் பெற இயலும். எனவே, ஆண்டுதோறும் 300 மீனவ இளைஞர்களுக்கு, மூன்று மாத கால பயிற்சி வழங்கப்படும். பயிற்சியின்போது, அவர்களுக்கு மாதம் 1,000 ரூபாய் உதவித் தொகை வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டம் ஒரு கோடியே 4 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) என்னால் தற்போது அறிவிக்கப்பட்ட திட்டங்களின் பயனாக, மீன்பிடி உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படுவதுடன், மீனவர் வாழ்வாதாரமும் மேம்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ) பாய்மரப் படகு அகாடமி நிறுவுதல், உடற்கல்வி, விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் மின் நூலகம் அமைத்தல், மலையேறும் பயிற்சிக்கான செயற்கை மாதிரி வடிவமைப்பு அமைத்தல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணாக்கர்களின் பன்முக வளர்ச்சிக்கு விளையாட்டு ஒரு காரணியாக உள்ளதால், கல்விக்கு அளிக்கும் அதே முக்கியத்துவத்தை விளையாட்டிற்கும் எனது தலைமையிலான அரசு அளித்து வருகிறது. சர்வதேச அளவிலான போட்டிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்களும், வீராங்கனைகளும், பங்கு கொண்டு வெற்றி பெறும் வகையில், பல்வேறு வகையான பயிற்சிகள் அளித்தல், பன்னாட்டு தரத்தில் விளையாட்டு மைதானங்கள் அமைத்தல், உள் விளையாட்டு அரங்கங்களை அமைத்தல், மாவட்ட விளையாட்டு வளாகங்களை அமைத்தல், தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளில் பதக்கம் வெல்பவர்களுக்கு உயரிய ஊக்கத்